உ

சிவமயம்.

மாணிக்கவாசகசுவாமிகள்

அருளிச்செய்த

# திருஞானத்தாழிசை.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என். சி.

1914.

# விளம்பரம்.

## அற்புத பூலோகரம்பை கதை.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக் கதை, பாரீஸ்கதை, குலேபகாவலிகதை நான்குபக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் சொல்லக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றாய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது எற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே டடித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவதுமன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச்செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகா அற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸகாகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.

உ

கடவுள் துணை.

மாணிக்கவாசகசுவாமிகள்

அருளிச்செய்த

# திருஞானத்தாழிசை.

சுழியாகியமுனைகண்டபின் னுற்றுருறவற்றாய்
சூதும்பலபொய்பேசிய தொழிலும்பிறக்கிட்டாய்
வழியாகியதுறைகண்டபின் னனுட்டானமுமற்றாய்
வழங்கும்பலநூல் கற்றிடுநினைவும்பிறக்கிட்டாய்
விழியாகியமலர்கண்டபின் னுயரர்ச்சனையற்றாய்
மெய்ந்நீரிடுதிருமந்திரம் விட்டாய்சிவமுற்றாய்
அழியாப்பதிகுடியேறியன் னச்சம்பலவற்றாய்
யாரொப்பவர்நினைவுற்றவ ரலைவற்றிருமனமே. (க)

நெஞ்சிற்பொருளடிகண்டபின் னெஞ்சிற்பகையற்றாய்
நேசத்தொடுபார்மங்கையர்மேலும் நினைவற்றாய்
மிஞ்சிச்சொலுமுரையாண்மையும் வீறும்பெருமிடும்பற்றாய்
விரதங்களும் வேதங்களும் வீணாகமறந்தாய்
அஞ்சும்முடலாய்கண்டபின் னாசைத்தொடர்பற்றாய்
ஆருந்திருக்கோயிலெனு மதுவுங்கசப்பற்றாய்

தஞ்சமெனுஞானக்கடன்மூழ்குந் திறமாகித்
தாள்சேர்ந்தனைகுறை வேதினிசலியாதிருமனமே. ( )

நாசிநுனைநடுவேதிருக்கூத்தாகிய நடனம்
ஞானக்கணிநாளும்மதை நாடிச்செயல்கண்டு
சீசீயெனும்முறையற்றனை சினமற்றனையுயிர்கள்,
செய்யுமந் நினைவற்றினை தேசத்துடன்கூடக்
கூசிக்குலவரவற்றனை கோள்வற்றனைபாவக்
குடியற்றனை நலமுற்றனை குடியேறினைமேலாங்
காசிப்புனல் தனின்மூழ்கினை கரையேறியகாக்ஷி
கண்டாயரன் கொலுவாகிய சபைமேவினைமனமே.

வெளிபெற்றிடுசொரூபப்பொருள் வெளியாகியவொளியில்
விளையாகியநாதத்தொனி விந்தின்செயல்கண்டு
களிபெற்றனை தயவுற்றனை பிறவிக்கடலென்னுங்
களையற்றனை யுலகத்தினில் வரவற்றனை காணு
வொளிபெற்றனை மயலற்றனை யொழிவற்றனையோது
முறையற்றனை களிபெற்ற பசியற்றனையூறல்
குளிபெற்றனை யரனுற்றிடு கொலுவுற்றனைகோமான்
கொடைபெற்றனையறிவுற்றனை கோளற்றனைமனமே.

பந்தோடிரு கலையாகிய பனிரண்டினிலும்
பாழ்போகிட மீண்டேவரும் பதியின்தலைநாளும்

பெற்ருேடிவங் திங்கேறிய பேர்மைத்தனைக்கண்டு
பேசுங்கலை யோடும்முறவாகிப் பிணக்கற்ருய்
சற்ருேருடன் கற்ருேமெனும் விஸ்தாரமுமற்ருய்
கானற்புன லோகப்பிடி மானத்தையுமற்ருய்
சித்தோடிரு சித்தாகிய சிற்றம்பலமீதே
சேர்ந்தாய்குறை தீர்ந்தாயினிவாழ்ந்தாயிருமனமே.

அல்லற்படுமோ ரொன்பதுவாசற் பெருவாசல்
ஆரும்மறிவார்க ளறியார்கள் ளொருவாசல்
சொல்லப்படு தில்லைச்சிறு வாசற்படிமீதே
சூழும்பலகரணுதிகள் வாழும்மணிவாசல்
இல்லைப்பதியருகே யடையாளமென லாகுஞ்
சேருங்கனிகாணும் பசிதீரும் பரத்தோடுஞ்
செல்லப்படு மல்லற்பலநூல் கற்றதினலே
சின்னஞ்சிறு வாசற்பகலாமோ சொலுமனமே (சு)

விண்டும்மொருவர்க்கும்முரையாடப்பொருள் தானும்
பீசாக்ஷர வீதித்தெருக் கோடிமுடிந்திடத்தே
கண்டுயிருந்தார்க்குள்ளிரு பரிபன்னிருகாலற்
காணும்மதுதானும் பனிரண்டங் பாயும் குலம்

பிண்டம் புகுமண்டம்புகுமெங்கும் விளையாடிப்
பீடம்மெனு நிலைசேர்ந்திடு பெருமைதனைக்காண்பா
என்றும்மொழி யற்றூர்பரத்தோடும் முறவாக்கி
யேதும்முரையாமல் லிருப்பார்களறிமனமே. (எ)

முப்பாழ்கடந் தப்பாலொரு முகப்புண்டதினடுவே
முச்சந்திகள் கூடுமது தானும்முதற்பாழாம்
அப்பாழ்கடந் தப்பாலொரு கணவாயதின் பெருமை
யறுகுநுனியிடமுமென வறிவார் பெரியோர்கள்
செப்பாததுநானுமறிந் தப்பாற்கடந்திட்டாற்
சேருங்கலைநாலும்வரு திசையுமறிந்திட்டால்
ஒப்பாரினி யிப்பாரினி லொப்பாருமேயில்லை
யொன்றைப் பிடிதண்மைப் படுமென்னப்படுமனமே.

நாதமெழுந் தெழுந்தோடி வந்துறையுந் திருக்கூத்து
ஞானக்கணிணுலுமதை நாடிச்செயல்கண்டு
பூதமெனும்பயமற்றனே பொறியற்றனெமெய்யிற்
பூசும்பரிமள மற்றனேபூ வற்றனேலோகஞ்
சூதமென வரவற்றினே சுசியற்றனே யெச்சிச்
சுத்தஞ்செயு நினைவற்றனே சுனவற்றினேஞானம்

பாதம்முடிமேல் வைத்தனே பற்றற்றனேயுற்றுப்
பதிபெற்றனே யிகலற்றனே பதையாதிருமனமே. (௬)

ஆயும்பல நூல்சாத்திர வேதம்மொடு புராணம்
ஆய்வந்திடு வழிகண்டறி யார்களதுதானும்
பாயுங்கலேபனிரண்டினி லுண்டாகியபருவம்
பாரும்மறியாதுப் பனிரண்டின்செயல்கண்டு
நாயின்கடைகெட்டாய்வழி பாடும்முதற்பெற்றுய்
நாள்கோள்பல வற்றுய்கொலேநாலொன்றையுமற்றுய்
வாயும்வலதற்றுயுயிர் வீடும்நெறியற்றுய்
மண்ணின் வரவற்றுயினி பொன்னம்பலமனமே. ()

கலேயாகிய பிறவிக்கடலலேயாம லுழன்றேன்
கற்கும்பலசமையங்களுந் தற்கங்களும் விட்டேன்
நிலேயாகிய பொருள்செல்வமு நினேவும்பிறர்க்கிட்டேன்
நித்தஞ்செய நியமங்களு நேரகமறந்தேன்
தொலேயாத வுறக்கத்தொடு சுகதுக்கமுமற்றேன்
துணேயாகிய ஞானக்டன் மூழ்குந்துறைகண்டேன்

அலையாமலிருக்குமன மதிலேகுடிகொண்டேன்
ஆநந்தம்வெளிப்பட்டபின் ஞனென்றறியேனே. ()

உருவானது விந்தின்பெயர் குருவானது ஞானம்
உடலுக்குயி ரீராறதி லொருநான்குள் முகலுங்
குருவானது மூனமீதினி லணுவாகிய வெளியிற்
குடியாகிய பதிகண்டவ னருள்வாதவூராளி
ஒருவாசக திருவாசகம் புவிமீதினின்மகிழ்ந்தே [ரோர்
யுரைசெய்தனர்தமிழ்த்தாழிசைநெறியின்படியின்
கருவாசலி லணுகாமலே பிறவாநெறிபெறுவார்
கடவுட்செயலறியாதவர் கருவாசலிற்புகுவார். (கஉ)

திருச்சிற்றம்பலம்.

## திருஞானத்தாழிசை

முற்றிற்று.

---